திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, பெண்கள் வேலைவாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள. தாய் குலத்திற்கு இப்போது இருக்கிற வேலை வாய்ப்பின் மீதே பெரும் படையெடுப்பு நடக்கிறது என்பதை நான் கூறிக் கொள்கிறேன். பெண்கள் என்ற ஒரே காரணத்தினால், பல்வேறு பெருத்த சகாய நிதி அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால், அதனால் எக்ஸ்ட்ரா செலவு ஆகிறது என்ற காரணத்தினால் பல்வேறு பெண் தொழிலாளர்கள் இன்றைக்கு பல தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். நான் ஒரு செய்தியைச் சொன்னால் உங்களுக்கே அது அதிர்ச்சியாக இருக்கும். மதுரா கோட்ஸ் என்ற நிறுவனத்தில் முன்பு 2 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே 2 பெண் தொழிலாளர்கள் தான் இருக்கிறார்கள். தாய்மையின் காரணமாக அவர்களுக்கு சகாய நிதி கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால் முதலாளிகள் இப்படி செய்து இருக்கிறார்கள். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். தாய்மைப்பேறு அடைவதே குற்றம் என்கின்ற வகையில் வேலையில் இருக்கின்றவர்களையே வெளியே அனுப்புகின்ற நிலைமையை, வேலைவாய்ப்பு அபிவிருத்தி என்ற பெயரால் அமைந்திருக்கும் இந்தக் கார்ப்பரேஷன் தடுப்பதற்கு சீரியசாகக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசிலனை செய்யும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குக் குறைந்த விலையில் வைக்கோல் விநியோகம் செய்யும் திட்டம்.

100—(*வினா எண். 18352)—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், கால்நடைகளுக்கு வேண்டிய வைக்கோல் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இரண்டு வட்டங்களில்தான் வைக்கோல் பற்றாக் குறை இருந்தது. இதர வட்டங்களில் வைக்கோல் பற்றாக்குறை ஏற்படவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்படவில்லை. எனவே, அந்த மாவட்டத்தில் 1983-84 ஆம் ஆண்டு வறட்சித் துயர் தணிப்புப் பணியின்கீழ் வைக்கோல் விநியோகம் செய்யப்படவில்லை.

1984 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

மதுரையில் இந்தி அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் கைதாகியிருப்பது.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இன்றைக்கு விடியற்காலம் ஐந்து மணி அளவில் அடியார் அவர்களும், அவரைச் சேர்ந்த பலரும் மதுரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்பொழுது முதலமைச்சரவர்கள் சபையில் இல்லை. அவர் வந்த பிறகு எழுப்பலாம் என்று சொன்னால் அப்பொழுது எழுப்பத் தயார். அல்லது இதுகுறித்து தகவல் ஏதேனும் இருந்தால் அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போன்று தினசரி நடக்கும் காரியங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, அடியார் கைது செய்யப்பட்டார் என்றால் அது சாதாரணமாக அல்ல. ஒரு இரயில்வே நிலையத்தில் இந்தி எழுத்துக்களை அழிக்கப் போகும்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது அரசியல் கட்சி நடத்தும் போராட்டம். அதுகுறித்து அரசாங்கத்திற்குச் செய்தி வந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றை வரைமுறையோடு கொண்டு வரவேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் கொண்டு வந்தால் எப்படி பதில் சொல்ல முடியும்? கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ வாய்ப்பா இல்லை? அப்படிக் கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1971–72 ஆம் ஆண்டு அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த இரண்டாம் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தோறாவது அறிக்கையையும்,